[திரு. என்.டி. வெங்கடாச்சலம்][2021 பிப்ரவரி 26

மதிப்பீட்டுக் குழுவின் 22 மற்றும் 23 ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளித்து, அமர்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–வது சட்டமன்றப் பேரவையின் கடைசிக் கூட்டத் தொடரில் எனக்கு பேச வாய்ப்பு கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் பணியாற்ற வாய்ப்பளித்த, 'நூற்றுக்கு நூறு' வெற்றி வாகை சூடிக் கொண்டிருக்கின்ற விதி–110–ன் நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்கும் எனது இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிருவாகம், ஆளுமை, சட்டம்–ஒழுங்கு, தொழில், முதலீடு ஈர்த்தல் எல்லாவற்றிலும், மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களின் தலைமையில் இயங்கும் அம்மாவின் அரசின் சிறந்த செயல்பாட்டால், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. அதே வகையில், சட்டமன்றப் பேரவையை ஜனநாயக பண்போடு, எல்லோரும் பாராட்டும் வகையில், வள்ளுவப் பெருந்தகை வகுத்துத் தந்த குறளுக்கேற்ப,

'தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்'

நடுநிலை என்ற அறம் காத்து, நிருவகிக்கும் பொறுப்பில் பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளதால், தமிழக சட்டமன்றப் பேரவை இந்தியாவிலேயே முன்னோடியாக விளங்குகின்றது என்ற பெருமையைக் கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மிகச் சிறப்பாகச் செயல்பட்ட மாண்புமிகு அமைச்சர்களுக்கும், 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற கோட்பாடுகளுடன்,

2021 பிப்ரவரி 26] [திரு. ஆர். நடராஜ்]

அம்மா அவர்கள் போதித்த ஒழுக்கத்தைப் பின்பற்றி சிறப்பாகப் பணியாற்றிய மாண்புமிகு கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) 'வெளி நடப்பே வழி நடப்பாய்' பயின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இதயமார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்குகின்றேன்.

கடந்த ஐந்து வருடம் அசாதாரண சூழ்நிலையைச் சந்தித்தோம். முதல் வருடம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இழந்தோம். கடந்த ஒரு வருடம் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற 'உழைத்தோம், வெற்றி கண்டோம்'. மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஆசியோடு மீண்டும் போட்டியிட எல்லோருக்கும் அளிக்கப்படும் வாய்ப்போடு, மக்களின் ஆதரவு பெற்று, பெரும்பான்மை பலத்தோடு 16–வது சட்டமன்றப் பேரவையில் மீண்டும் சந்திப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 2018–2021 ஆம் ஆண்டுகளுக்கான 172 முதல் 186 வரையிலான 15 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்களின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

பொதுக் கணக்குக் குழுவின் விவாதங்களுக்கு பெரும் உதவியாக இருந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் ஆற்றல்மிக்க அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 137 முதல் 154 வரையிலான 18 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.